3RD

# மூன்றாம் திருப்புதல்தேர்வு - 2014

10 - ஆம் வகுப்பு

# தமிழ் முதல் தாள்

காலம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1. இவ்வினாத்தாள் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.

2. விடைகள் தெளிவாகவும் குறித்து அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I (மதிப்பெண்கள் - 20) பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 X 1 = 6

1. வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே எனப் பாடியவர் ........ .
   அ) பாரதிதாசன் ஆ) கவிமணி இ) பாரதியார்
2. தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
   நேசமுற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார். - இப்பாடலடிகளில் அமைந்த தொடை
   அ) மோனை ஆ) எதுகை இ) இயைபு
3. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்
   அ) சோழ நாடு ஆ) சேர நாடு இ) பாண்டிய நாடு
4. சரசுவதி அந்தாதி - இயற்றிய நூல்களுள் ஒன்று
   அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) புகழேந்தி
5. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் ............ .
   அ) பகவத் கீதை ஆ) நன்னூல் இ) பைபிள்
6. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று
   அ) வாக்குரிமைஇல்லாமை ஆ) பேச்சுரிமைஇல்லாமை இ) சொத்துரிமைஇல்லாமை ஈ) எழுத்துரிமைஇல்லாமை

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** 6 X 1 = 6

7. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் ............ .
8. சீறாப்புராணத்தை இயற்றியவர் ........... .
9. சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்து பாடியவர் .......... .
10. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ............ இருக்கும்.
11. இலைமூரியாவை ............ என்பர்.
12. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்பர் .......... .

## பகுதி - 3

**பொருத்துக.** 4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 13. சாலை இளந்திரையன் | - | கலித்தொகை |
| 14. திருநாவுக்கரசர் | - | சீறாப்புராணம் |
| 15. நல்லந்துவனார் | - | பூத்தது மானிடம் |
| 16. உமறுப்புலவர் | - | தேவாரம் |

## பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க.** 4 X 1 = 4

17. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
18. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.
19. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
20. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர்.

## பிரிவு - II (மதிப்பெண்கள் : 20) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 5 X 2 =10

21. இறைவனை வாழ்த்தும் போது மாணிக்கவாசகர் எந்நிலையில் இருந்தார்?
22. குகனின் வேண்டுகோள் யாது?
23. கையுறைப் பொருள்களாக குகன் கொண்டு சென்றன யாவை?
24. வயல் தரும் விளைவுகள் யாவை?
25. வேந்தற்குரிய பொருள்கள் யாவை?
26. கலம்பக உறுப்புகள் நான்கினை எழுதுக.
27. திருவள்ளுவருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

## பகுதி - 2

5 X 2 = 10

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

28. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
29. மொழிமாற்றம் என்றால் என்ன?
30. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

31. வள்ளலாரின் முழக்கம் என்ன?
32. சிறுதொழிற் பயிற்சி பற்றிக் குறிப்பு வரைக.
33. நோய் வருவதற்கான காரணம் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன?
34. காந்தியடிகளின் அறவழிப்போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?

பிரிவு - III (மதிப்பெண்கள் : 24) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

35. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை? 3 X 4 = 12
36. சாதனைப்பூக்கள் என்று எவற்றை சாலையார் சுட்டுகிறார்?
37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
38. கம்பராமாயணம் - நூற் குறிப்பு எழுதுக.
39. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறுவரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

40. பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துக்கள் யாவை? 3 X 4 = 12
41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?
42. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது?
43. மேடைப் பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை?
44. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

பிரிவு - IV (மதிப்பெண்கள் : 10)

45. **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்
திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள் வரம் பாகப்
புகழ்பா வினங்கள்மடைப் போக்கா - நிகழவே.

i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது?
ii) இப்பாடலில் உனக்கு என்பது எதைக் குறிக்கும்?
iii) நான்கு வகைப் பாக்கள் எவை?
iv) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடியெதுகைகளை எடுத்து எழுதுக.
v) அரியாசனம் - பொருள் தருக.

46. **கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5

அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு. அறத்தின் வழியே பொருளைக் கண்டது. அவ்வறத்தின் வழியே இன்பத்தினை எட்டியது. அக்காலத்தே அறம், பொருள், இன்பம் வாழ்வைத் தமிழர் பெற்றிருந்தனர்.

பழந்தமிழர் அன்பு வழியினர் அன்பைப் போற்றியது போலவே வீரத்தையும் போற்றினர். வீரமற்ற ஆடவரை அக்கால பெண்டிர் மணந்து கொள்ள விழையார், பெண்பாற் புலவர்கள் பெண்களின் பெருவீரத்தினைப் பாடியிருக்கிறார்கள். சான்றாக மறக்குடியில் பிறந்த மாண்புடைய பெண்ணொருத்தி தன் தந்தை, கணவன் ஆகியோரை இழந்த பிறகு, பால்மணம் மாறாச் சிறுவனை செருக்களம் நோக்கிப் பகைத்திறம் மாய்க்க விடுத்தாள். என்னே, அவள் துணிவு! புறப்பாடல்கள் இதனை விளக்குகின்றன.

i) அன்பு வழியினைப் பின்பற்றியவர் யார்?
ii) பழந்தமிழர் வாழ்வு எதனை அடிப்படையாக கொண்டது?
iii) புறப்பாடல் - பிரித்து எழுதுக.
iv) செருக்களம் - பொருள் தருக.
v) இவ்வுரைப் பகுதிக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

பிரிவு - V (மதிப்பெண்கள் : 26) பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.** 2 X 8 = 16

47. (அ) கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக. ***(அல்லது)***
(ஆ) பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
48. (அ) தாய் மொழி உயர்தனிச் செம்மொழி என்னும் கூற்றை நிறுவ ஐந்து சான்றுகள் தருக. ***(அல்லது)***
(ஆ) தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.

பகுதி - 2

49. **செய்யுள் வடிவில் விடை எழுதுக.** 2 + 2 + 3 + 3 = 10

அ) 'ஒழுக்கம்' - எனத் தொடங்கும் குறள்.
ஆ) 'வினை' - என முடியும் குறள்.
இ) 'துன்புளதெனின்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
ஈ) 'இன்று தொட்டிவண்' எனத் தொடங்கும் சீறாப்புராணம் பாடல்.